DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 311 /2020 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | பாஸ்கரன் |
| Father’s /Husband Name | : | சோமசுந்தரம் |
| Village | : | செங்காங்கண்ணி |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 48 |
| Occupation | : | இட்லி கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01h day April 2025.
Accused present. App and defense counsel present.

**முதல் விசாரணை:-**

கும்பகோணம் புதுரயில்வே ரோட்டில் சேய்குளம் அருகே வருமான வரி அலுவலகம் பக்கத்தில் இட்லி வியாபாரம் செய்து வருகிறேன். 02.07.2019ம் தேதி இரவு 10.00 மணியளவில் செக்காங்கண்ணி ரோட்டிலிருந்து மோதிலால் தெருவிற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சைக்கிளில் வந்த ஆலப்பன் சேய்குளத்தை கடக்கும்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக வந்த TN 45 BJ 3611 லட்சமி பேருந்து ஆலப்பன் சைக்கிள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்து நின்றுவிட்டது. ஆலப்பன் மேற்கு பக்க ரோட்டில் விழுந்துகிடந்தார். நான் சென்று பார்த்தேன். ஆலப்பன் அடிப்பட்டு சுயநினைவின்றி கிடந்தார். நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆலப்பனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி பேருந்தின் ஓட்டுநர் ஆஜர் எதிரி சங்கர் ஆவார். ஆலப்பன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் தள்ளுவண்டியில் இட்லி வியாபாரம் செய்து வருகிறேன். சம்பயிடத்திலிருந்து எனது கடை எவ்வளவு தூரம் என்றால் சுமார் 20 மீட்டர் இருக்கும். விபத்து சமயத்தில் வியாபாரம் செய்தேனா, சும்மா இருந்தேனா என்றால் சுமார் 1-2 வாடிக்கையாளர்கள் இருந்தார்கள். ஆலப்பனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவரை தெரியாது, விபத்து சமயத்தில் பெயரை தெரிந்து கொண்டேன். அ.சா.1யை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தன்று இரவும், மறுநாளும் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். கையொப்பம் எப்போது செய்தேன் என்றால் மறுநாள் விசாரித்தபோது செய்தேன். ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தது என்றால் நினைவில்லை. நான்

சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் கடை வியாபாரம் செய்து கொண்டிருந்தேன் என்றாலும், நான் விபத்தை பாரக்கவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியால் விபத்து நடக்கவில்லை என்றாலும், ஆலப்பன் வயது முதிர்வின் காரணமாக கீழே விழுந்தார் என்றாலும், பேருந்து மோதவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.